பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

மக்களின் ஏடு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 25 புதன்கிழமை (09 - 08 - 2000) VALAMPURI ஒலி: 233

★ அரசியல் அமைப்பு சீர்திருத்த

# மசோதா மீதான விவாதம்

# திடீரென ஒத்திவைப்பு!

## பாராளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பு

(அலுவலக நிருபர்)

பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்புச் சீர்திருத்த மசோதாவுக்கு 150 எம். பிக்களின் ஆதரவைப்பெற முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டதாலேயே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மசோதாவை வாக்கெடுப்பிற்கு விடாமல் காலவரையின்றி பின்தள்ளி வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால்; அரசியல் சீர்திருத்த மசோதாவுக்கு 60க்கு மேற்பட்டதிருத்தங்களும், 40க்கு மேற்பட்ட எம். பிக்கள் மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொள்ள இருப்பதனாலும், விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகசபாநாயகர்தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அரசு எதிர்பார்த்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது விடும் என்பதனால் மசோதா மீதான விவாதம் இடை நடுவில் நிறுத்தப்பட்டு காலவரையறை இன்றி பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இரண்டாவது நாளாக நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விட்ட இடத்திலிருந்து பேச்சைதொடர ஐ. தே. கட்சி தயாராகவுள்ளது

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவுக்கு150எம். பிக்களின் ஆதரவு கிடைக்காது என்று அரசு கருதியதாலேயே மசோதாவை வாக்கெடுப்புக்குவிடாது அதனை பின்தள்ளி வைத்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்:

பாராளுமன்றத்தில் மசோதா ஒத்திவைததைதை அடுத்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே ரணில் இவ்வாறு தெரிவித்தார்;

[8ஆம் பக்கம் பார்க்க]

## கைதடி நபர் உக்கிரைனில் மர்மமான முறையில் கொலை

## பயணச்சீட்டு இன்று வழங்கல்

சிற்றி ஒவ்றிங்கோ பயணிகள் கப்பலுக்கான பயணச்சீட்டு இன்று காலை ஒன்பது மணிக்குயாழ் சிவில்நிர்வாகக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும். (ந)

## இன்று விவாதம்

(கொழும்பு)

அவசரகால கூட்ட நீடிப்பு சம்பந்தமான விவாதம் இன்று பாராளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது. (வ)

## பாராளுமன்றம் வராத இலியாஸ் எம்.பி. ஹெலி மூலம் தேடப்பட்டார்

யாழ். மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் இலியாஸ் நேற்று முன்தினம்பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்க வில்லை. இதனைத் தொடர்ந்து தபால் தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா புத்தளத்தில் உள்ள இலியாஸின்வீட்டிற்கு ஹெலியில் சென்று தேடினார் எனத் தெரியவருகின்றது. இதே வேளை இலியாஸ் எம் பி நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் மசோதாவை எதிர்க்கக் கோரி

## 4 பௌத்த பீடாதிபதிகள் எம்.பிக்களுக்கு கடிதம்

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவை ஆதரித்துபாராளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டாம் என்று நான் பௌத்தபீடத்தைச்சேர்ந்த தேரர்கள் எம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் புதுடில்லி நியாயசபை விளக்கம் கோரியது

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சட்ட பூர்வமற்ற ஒரு அமைப்பாக ஏன் கருதக் கூடாது.

[8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் ஆதரவைபெறுவதற்கு

# கூட்டணியின ஆதரவைப்பெறுவதற்கு ஆளுங்கட்சி இறுதிவரை முயற்சி

## பலன் எதுவும் கிடைக்கவில்லை

(கொழும்பு)

அரசியல் சீர்திருத்த மசோதாவிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஆளுங் கட்சி இறுதிவரை முயற்சி செய்ததாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இம்முயற்சியில் ஆளுங்கட்சியின் சார்பில் புனர்வாழ்வு, கப்பல்துறைமுக அமைச்சர் அஷ்ரப் தொலைபேசி மூலம் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தனுடன் தொடர்பு கொண்டதாகவும் தெரியவருகிறது.

எனினும் அரசியல் சீர்திருத்த மசோதாவிற்கு ஆதரவு வழங்குவதில்லை என்பதில் கூட்டணி உறுதியாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# கைதடி நபர் உக்கிரைனில் மர்மமான முறையில் கொலை

(தென்மராட்சி)

கைதடி வடக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான ஆசைக்கிளி (வயது 42) என்ற நபர் உக்கிரைன் நாட்டில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களை உக்கிரைன் நாட்டுக்கு ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கும் பணியில் இவர் அங்கு ஈடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இடம் பெயர்ந்தோருக்கு மாட்டுத் தீவன அரிசியே நிவாரணமாக வழங்கப்படுகிறது

## மாவை எம்.பி. ஜனாதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

துன்ப துயரங்களில் சிக்குண்டு இன்னலுறும் மக்களுக்கு அகதி முகாம்களில் மாட்டுத் தீவனத்திற்கு பயன்படுத்தும் அரிசியையே வழங்கி வருகிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவித்துள்ளார்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணா விரதிகள் மயமுக்கமுற்றனர்

[மட்டக்களப்பு]

மட்டுமாவட்டவேலையற்ற பட்டதாரிகளினால் கடந்த 4ந் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டுவரும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றையதினம் நான்கு உண்ணாவிரதிகள் மயக்கமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனும

(8 ஆம் பக்கம் பார்க்க]

# இரண்டாவது நாளாக சாகும்வரை உண்ணா விரதம்

அரசியல் சீர் திருத்த மசோதாவை எதிர்த்து பிக்குமார் மகா சங்கத்தைச் சேர்ந்த கெடிகல்ல விமலசேகர தேரர் (வயது 30) இரண்டாவது நாளாக நேற்று சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தார். புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இவர் உண்ணாவிரதத்தை மேற் கொண்டுள்ளார். அரசியல் அமைப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நேற்று பரவலான ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஆயிரத்துக்கும் அதிகமான புத்த பிக்குகள் நேற்று பாராளுமன்றத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி உள்ளனர்.

ஆர்ப்பட்டக்காரர் பாராளுமன்றத்துக்குள் செல்ல முற்பட்டபோது அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

**சீமெந்து கூரை ஓடுகள்.**

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களும் விற்பனைக்குண்டு:

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகளும் இலவச போக்கு வரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.
பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில். (1611)

## சுட்டெண்கள் இன்று வழங்கல்

(புலோலி)

சாவகச்சேரிஸ்சந்தவரோதயாக் கல்லூரி, மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயங்களில் இருந்து 5 ஆம் ஆண்டுப் புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான சுட்டெண்கள் இன்று காலை 9 00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும் என அவ்வப் பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். [சு-52]

## கலந்துரையாடல்

(மண்கும்பான்)

வேலணை கால் நடைவைத்தியசாலையின் மாவட்டகால் நடை சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இராமநாதன் கால்நடை வளர்ப்பேருடன் அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது செயற்கை முறைச் சினைப்படுத்தலின் மூலம் உயிரின உருவாக்கம், கால் நடைகளிற்கானநோய்த்தடுப்பூசி ஏற்றுதலின் முக்கியத்துவம் பற்றியும் கூறினார்.

கால்நடை வளர்ப்பிற்கான அபிவிருத்தி தொடர்பாகவும் உதவிக்கல்விப்பணிப்பாளர் இக்கலந்துரையாடலின் போது விளக்கமளித்தார். (த-2-83)

# இரட்டை குழந்தைகள் பெற்றவர்களுக்கு இப்படியும் ஒரு அதிர்ஷ்டம்

## ரூபா 10 ஆயிரம் வழங்கப்படும்

(கொழும்பு)

இரட்டைக் குழந்தைகளுக்கு நிதி வழங்கும்திட்டம் ஒன்றை சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இரட்டைக் குழந்தைகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும், மூன்று குழந்தைகளுக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஒரு வருட காலத்திற்கு வளர்ப்பு உதவு தொகையாக வழங்கப்படும் என சிறுவர் பாதுகாப்பு திணைக்கள ஆணையாளர் ரணகே தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குழந்தைகளை வளர்ப்பதில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நிதி வழங்கும் திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக சென்ற வருட ஜுலை மாதத்தில் இருந்து இவ்வருட ஜுலை மாதம் வரையில் பிறந்த 23 இரட்டைக் குழந்தைகள் பயனடைய இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த மூவரிற்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

(புலோலி)

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த மூவருக்கு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் ஏ. கே. நடராஜா 5000 ரூபா அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் 3 மாத கடூழியச்சிறைத் தண்டனையும் அத்துடன் 3 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத கடூழியச் சிறைத்தண்டனையும்விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

பளையில் இருந்து இடம் பெயர்ந்து துன்னாலையில் வசிக்கும் துரைசிங்கம் கமலேஸ்வரன், துன்னாலை தெற்கு காவெட்டியைச் சேர்ந்தகிட்டிணபிள்ளைசெல்லம்மா, பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை இரெத்தினம் ஆகிய மூவரும் சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்தார்கள் எனக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிவான் ஏ. கே. நடராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே மேற்படி தண்டனை வழங்கப்பட்டது. (க-52)

## அபிப்பிராய வாக்கெடுப்பு அவசியமில்லை

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை, அரசியல் யாப்புக்கு முரணானதல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சபாநாயகர் கே பி. ரத்னாயக்கா இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

அரசியல் யாப்பின் 17 வது திருத்தத்தை அமுல் செய்ய அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவது அவசியமில்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதுடன், இத்திருத்தம் தொடர்பாக நீதிமன்றம் பல்வேறு நடவடிக்கைகளையும் சிபார்சு செய்துள்ளது. (உ)

## 14 வயது சிறுமி மீது பாலியல் வல்லுறவு இராணுவ சிப்பாய்கள் விளக்கமறியலில்

(புலோலி)

புலோலியில் 14 வயது மாணவி மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவ வழக்கில் சந்தேக நபர்களான இரண்டு இராணுவச் சிப்பாய்களும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கரா ஆகிய இருவரும் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட போது மீண்டும் அவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் இடம் பெற்ற அடையாள அணிவகுப்பின்

## வலம்புரி வாழ்க பல்லாண்டே!

நலிவகல நம்மவர்க்கு நல்லவழி தனைக்காட்டி
வலிமைதனை வழங்கிடவே வலம்வந்து நிதமிங்கே
ஒலியதனை மிகவெழுப்பி ஒப்பரிய பணிசெய்யும்
வலம்புரி நீ தமிழுலகில் வாழ்க பல்லாண்டே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

**சங்கானை**

| | |
|---|---|
| 130746 ஏ | 130746 பி |
| 130746 சி | 144043 ஏ |
| 146392 ஏ | 146392 பி |
| 146392 சி | 146392 டி |
| 146429 ஏ | 146429 பி |
| 146429 சி | 146429 டி |
| 146429 ஈ | 146429 எவ் |
| 146429 ஜி | 146454 ஏ |
| 146998 ஏ | 146998 பி |
| 147149 ஏ | 147431 ஏ |
| 150467 ஏ | 150467 பி |
| 150467 சி | 150467 டி |
| 150467 ஈ | 150478 ஏ |
| 150478 பி | 150478 சி |
| 150478 டி | 150541 ஏ |
| 150541 பி | 150554 ஏ |
| 150572 ஏ | 150577 ஏ |
| 150593 ஏ | 150593 பி |
| 150593 சி | |
| 150738 ஏ | 150776 ஏ |
| 150776 பி | 150776 சி |
| 150776 டி | 150805 ஏ |
| 151869 ஏ | 151869 பி |
| 153222 ஏ | 153222 பி |
| 153283 ஏ | 153283 பி |
| 153283 சி | 153283 டி |
| 153283 ஈ | 153382 ஏ |
| 153382 பி | 153382 சி |
| 153382 டி | 153382 ஈ |
| 153382 எவ் | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 143818 ஏ | 146310 ஏ |
| 146310 பி | 146310 சி |
| 146458 ஏ | 146458 பி |
| 146492 ஏ | 146492 பி |
| 146492 சி | 150326 ஏ |
| | 150403 ஏ |
| 150403 பி | 150460 ஏ |
| 150472 ஏ | 150472 பி |
| 150477 ஏ | 150477 பி |
| 150529 ஏ | 150687 ஏ |
| 150687 பி | 150784 ஏ |
| 151759 ஏ | 151759 பி |
| 151766 ஏ | 151766 பி |
| 151848 ஏ | 151848 பி |
| 151848 சி | 152539 ஏ |
| 152539 பி | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 129311 ஏ | 129311 பி |
| 135775 ஏ | 138137 ஏ |
| 138137 பி | 141743 ஏ |

| | |
|---|---|
| 150514 ஏ | 150514 பி |
| 150514 சி | 150514 டி |
| 150520 ஏ | 150765 ஏ |
| 150767 ஏ | 150767 பி |
| 150768 ஏ | 150785 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 144969 ஏ | 144969 பி |
| 138277 ஏ | 138277 பி |
| 138277 சி | 138277 டி |
| 141725 ஏ | 141725 பி |
| 143849 ஏ | 143849 பி |
| 143874 ஏ | 143874 பி |
| 143874 சி | 143907 ஏ |
| 143907 பி | 146298 ஏ |
| 146337 ஏ | 146337 பி |
| 146337 சி | 146359 ஏ |
| 146359 பி | 146359 சி |
| 146403 ஏ | 146403 பி |
| 150319 ஏ | 150397 ஏ |
| 150398 ஏ | 150446 ஏ |
| 150446 பி | 150446 சி |
| 150446 டி | 150571 ஏ |
| 150571 பி | 150591 ஏ |
| 150615 ஏ | 150615 பி |
| 150648 ஏ | 150692 ஏ |
| 150692 பி | 150697 ஏ |
| 150697 பி | 150697 சி |
| 150697 டி | 150710 ஏ |
| 150777 ஏ | 150780 ஏ |
| 151773 ஏ | 151846 ஏ |
| 151846 பி | 151846 சி |
| 151846 டி | 151886 ஏ |
| 152540 ஏ | 152540 பி |
| 153291 ஏ | 153471 ஏ |
| 153471 பி | 153471 சி |
| 153495 ஏ | 153495 பி |

(நா)

## இடம்பெயர்ந்...

வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதி அகதி முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள இடம் பெயர்ந்தோர் நிலைமைகள், அவர்கள் எதிர்நோக்கும் அவலம் குறித்து நேரடியாக ஆராய்ந்ததையடுத்தே மேற்கண்ட அறிக்கையை அவர் விடுத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அகதி முகாம் மக்களுக்கு தற்போது வழங்கப்படும் நிவாரணத்தை இருமடங்காக அதிகரிப்பதுடன்பருப்பு, கோதுமை மா போன்றவையும் நிவாரணமாக வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

கால்நடை வளர்ப்பிற்கான அபிவிருத்தி தொடர்பாகவும் உதவிக்கல்விப்பணிப்பாளர் இக்கலந்துரையாடலின் போது விளக்கமளித்தார்.
(த-2-83)

## புதிய நிர்வாகசபை தெரிவு

(இருபாலை)

கரவெட்டி திருவள்ளுவர்சன சமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வடமராட்சி தென் மேற்குப் பிரதேசசபைத் தலைவர் வல்லிபுரம் நடராசா தலைமையில் நடை பெற்றது.

நெல்லியடி ஈ. பி. டி. பி. காரியாலயத்தில் நடைபெற்ற இந்நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சி. பசுபதி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம் கலந்து கொண்டனர்.

புதிய அங்கத்தவர்கள் பலர் நிர்வாக உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதாக செயலாளர் ந. சத்தியதாசன் தெரிவித்தார். (த)

## வீதி திருத்தம்

(மல்லாகம்)

கோண்டாவில் வடக்கு, டிப்போ வீதி மிக நீண்டகாலமாக திருத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் இருந்தது.

ஆனால் அண்மையில் அவ்வீதி சிறந்த முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது.
(த-14)

புலோலியில் 14 வயது மாணவி மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவ வழக்கில் சந்தேக நபர்களான இரண்டு இராணுவச் சிப்பாய்களும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தின் பதில் நீதிவான் ஏ.கே. நடராஜா முன்னிலையில் சந்தேக நபர்களான எஸ். பெரேரா, எஸ். கன்னங்கடும் ஆஜர் செய்யப்பட்ட போது மீண்டும் அவர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் இடம் பெற்ற அடையாள அணிவகுப்பின் போது சாட்சிகளால் இந்த சந்தேக நபர்கள் அடையாளம் காட்டப்படவில்லை எனத் தெரியவருகின்றது.
(சு-52)

# தபாலகம் தரம் உயர்த்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவற்காடு உபதபாலகம் தபாலகமாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

மேற்படி தபாலகத்தை தபால் தொலைத் தொடர்பு சாதன பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா அடுத்தவாரம் வைபவ ரீதியாக திறந்துவைக்கவுள்ளார்.

30 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்ட இப் பிரதேசத்தில் 3 உப தபாலகங்கள் உள்ளன. ஆனால் ஒரு தபாலகம் இல்லாமல் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2000 ரூபாவிற்கு மேற்பட்ட காசுக் கட்டளையை அனுப்புவதற்கு மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருந்தது

அண்மையில் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுணதீவுப் பகுதிக்கு தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா விஜயம் செய்த போது அப்பகுதி மக்களும், முக்கியஸ்தர்களும் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாக தெரியப் படுகிறது, (சு-60)

## தொடர்பு கொள்ளவும்

கீழே பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது.

சிவகுரு சின்னத்தம்பி மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, கந்தையா சண்முகலிங்கம் 125 திருமகள் வீதி அரியாலை, அமிர்தலிங்கம் முந்து மல்லிகை மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, கந்தையா கனகசபை மருதடி வீதி சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி, சின்னத்தம்பி நமசிவாயம் மருதடி வீதி சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி, செல்லத்துரை வசந்தகுமார் கல்வியங்காடு, தம்பு முருகானந்தம் (வாசன்) மறவன்புலவு வடக்கு சாவகச்சேரி, (உ)

| | |
|---|---|
| 151848 சி | 152539 ஏ |
| 152539 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 129311 ஏ | 129311 பி |
| 135775 ஏ | 138137 ஏ |
| 138137 பி | 141743 ஏ |
| 141743 பி | 143982 ஏ |
| 143982 பி | 143982 சி |
| 146330 ஏ | 147382 ஏ |
| 148264 ஏ | 148274 ஏ |
| 148274 பி | 148274 சி |
| 150331 ஏ | 150348 ஏ |
| 150444 ஏ | 150503 ஏ |
| 150503 பி | 150503 சி |
| 150503 டி | 150531 ஏ |
| 150531 பி | 150531 சி |
| 150531 டி | 150531 ஈ |
| 150549 ஏ | 150579 ஏ |
| 150582 ஏ | 150582 பி |
| 150605 ஏ | 150605 பி |
| 150605 சி | 150631 ஏ |
| 150631 பி | 150669 ஏ |
| 150676 ஏ | 150676 பி |
| 150681 ஏ | 150688 ஏ |
| 150715 ஏ | 150722 ஏ |
| 150722 பி | 150726 ஏ |
| 150729 ஏ | 150729 பி |
| 150729 சி | 150729 டி |
| 150729 ஈ | 150729எவ் |
| 150729 ஜி | 150740 ஏ |
| 150751 ஏ | 150751 பி |
| 150751 சி | 150801 ஏ |
| 150801 பி | 151790 ஏ |
| 151790 பி | 151831 ஏ |
| 151834 ஏ | 151834 பி |
| 151849 ஏ | 151849 பி |
| 152541 ஏ | 152541 பி |
| 153290 ஏ | 153290 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143808 ஏ | 150336 ஏ |
| 150370 ஏ | 150370 பி |
| 150513 ஏ | 150513 பி |

தற்போது வழங்கப்படும் நிவாரணத்தை இருமடங்காக அதிகரிப்பதுடன் பருப்பு, கோதுமை மா போன்றவையும் நிவாரணமாக வழங்கப் படவேண்டியது அவசியமாகும்.

இம் மக்கள் ஒன்றிற்கு மேற் பட்ட தடவைகள் இடம் பெயர்ந்துள்ளதுடன் இவர்களுக்கு அரிசி நிவாரணத்தை மட்டும் வழங்கிவிட்டு ஏனைய உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டன.

மேலும் இம் மக்களுக்கு வழங்கப்பட உள்ள 2 ஆயிரம் ரூபா 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இம் மக்களுக்கு வழங்கும் நிதி உதவியை நன்றியுடன் நினைவு கூரும் அதே வேளையில் இவ் உதவிகள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மேலும் வறுமை மட்டமாக அரசினால் கருதப்படும் 1500 ரூபா வடபகுதிக்குப் பொருந்தாது என்பதும் இங்கு குறிப் பிடத்தக்க தாகும்.

கரையோரப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்ததுடன் தொழில் எதுவும் இன்றி நிர்க்கதி நிலையில் உள்ளது மட்டுமன்றி இடம் பெயர்ந்து அல்லலுறும் சிற்றூழியர்கள் மற்றும் இயங்காத நிலையில் உள்ள சங்க ஊழியர்களின் நலன்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதையும் வலியுறுத்த விழைகின்றேன்.
(க-வ)

# நிறை குறைந்த பாண் உற்பத்தியில் 10 இற்கும் மேற்பட்ட பேக்கறிகள்

## திடீர் வேட்டையில் கண்டுபிடிப்பு

[யர்ழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் பத்திற்கும் மேற்பட்ட பேக்கறிகள் நிறைகுறைந்த பாணை உற்பத்திசெய்வதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம் மேற்கொண்ட திடீர் வேட்டையின்போது மேற்படி சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதி, சுழிபுரம், சதுமலை, சில்லாலை இளவாலை உட்பட்ட பகுதிகளிலேயே திடீர் சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட பேக்கறி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் இந்நிலை தொடருமானால் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

[க - 12)

# துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய இளைஞன் வைத்தியசாலையில்

(வடமராட்சிகிழக்கு)

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகிய இளைஞர் காயம் அடைந்த நிலையில் மந்திகை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலையைச் சேர்ந்த சிவானந்தம் சிவதாசன் வயது 22 என்பவரே காயமடைந்தவராவார்.

கோஷ்டி மோதலின் போது இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-43)

# அச்சுவேலிக் கொலை சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தமேனியில் கடந்த 26 ஆம்திகதி இரவுவேளை கொலை செய்யப்பட்ட கார்த்திகேசு இராசசேகரனின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பொன்னம்பலம் சந்திரகுமார் 36, கதிரவேலு சண்முகதாசன் 64, தம்பையாகுணரத்தினம் 45 ஆகியோரே அச்சுவேலி பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டவர்களாவர். இதேவேளைஇக்கொலை தொடர்பான மரண விசாரணையை இம்மாத இறுதிக்குள் மன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென நீதிமன்றம் அச்சுவேலி பொலிசாருக்கு கட்டளைஇட்டுள்ளது. (ந 12)

## சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில்

# ஈடுபட்டோர்; பொலிஸாரைக் கண்டு ஆற்றில் குதித்து உயிரை மாய்த்தனர்

(கொழும்பு)

சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டோர், பொலிஸாரின் சுற்றிவளைப்புக்கு பயந்து நீர்த்தேக்கத்தில் குதித்து தமதுயிரை மாய்த்துக் கொண்டனர்.

காசல்றி நீர்த்தேக்கத்திற்கருகில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இருவரே இவ்வாறு தமதுயிரை மாய்த்துக் கொண்டவர்களாவர்.

சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதை அறிந்த பொலிஸார், அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய சமயம், அகழ்வில் ஈடுபட்டிருந்த இருவர் நீர்த்தேக்கத்தில் குதித்தனர் எனவும் இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(உ)

# இளைஞர்கள் விடுவிப்பு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையிடப்பட்டிருந்த மூவர் யாழ். மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதடி தெற்கு விக்னேஸ்வரராசா சுபாஸ்கரன், நாவலர் வீதி யாழ்ப்பாணம் பாக்கியராசா விஸ்ணுகாந்தன், அதே இடத்தைச் சேர்ந்த குலேந்திரன் கௌரீதரன் ஆகிய மூவருமே நேற்று விடுவிக்கப்பட்டவராவார்.

(க-12)

# வீட்டுக் குப்பைகளில் பொலித்தீன்பைகள் பசளைக்காக சணல் பயிர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விவசாயிகள், சணல்பயிரை தமது தோட்டநிலங்களுக்குப் பசளையாகப் பயன்படுத்துவதில் தற்போது நாட்டம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.

முன்னைய காலங்களில் பெரும்பாலான விவசாயிகள் வீட்டுக் குப்பைகளையே தோட்டங்களுக்குப் பசளைக்காக பயன்படுத்தி வந்தனர்.

தற்போது அவ்வாறு பெறப்படும் வீட்டுக் குப்பைகளில் பெருமளவில் பொலித்தீன் பைகளும், பால்மாப் பைகளும் காணப்படுவதால் அவை உக்கிப் பசளையாக மாறாது தீன்பைகளில் அடைக்கப்பட்டு பாவனைக்கு வந்துள்ளமையே இதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

இதேசமயம், வீட்டுக் குப்பைகளை விட சணல்பயிர் அதிகபசளைத்தன்மைகொண்டதாக இருப்பதுவும் இதற்கு முக்கியகாரணமாகும். (உ)

## சண்டிலிப்பாய்,

# பிரதேச பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக இருப்பிடவசதி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள பாடசாலைகளில் தங்கியுள்ள குடும்பங்கள் படிப்படியாக வெளியேறி வருகின்றனர்.

இவர்களுக்கான தற்காலிக இருப்பிட வசதிகளை, சத்தாவத்தை ஆனைக்கோட்டை, பழைய பொலிஸ் நிலையம் பகுதிகளில் கெயர் நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை என்பன இணைந்து அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளதையடுத்து மேற்படி வெளியேற்றம் ஆரம்பித்துள்ளது

இந்தவகையில், கெயர் நிறுவனம் 200 குடிசைகளையும், வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை 100 குடிசைகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 200 குடிசைகளையும் அமைத்து வருகின்றது.

இத்திட்டம்முழுமை பெற்றதும் சண்டிலிப்பாய் பகுதிப் பாடசாலைகளில் தங்கியுள்ள அனைத்து இடம்பெயர்ந்த குடும்பங்களும் வெளியேற்றப்படுவர் என சண்டிலிப்பாய் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

(உ-சு-12)

# வவுனியா பிரயாணிகள் சங்கப் போராட்டம் 10ஆம் திகதி

(வவுனியா)

வவுனியா மாவட்ட பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் 7ஆம்திகதி நடத்தவிருந்தமறியற் போராட்டத்தை 10ஆம் திகதி வியாழக்கிழமைக்கு ஒத்தி வைத்துள்ளனர்.

வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. பாலச்சந்திரன் போக்கு வரத்து அமைச்சர் பௌஸியுடனும் மத்திய போக்கு வரத்துச் சபைத் தலைவருடனும் தொடர்பு கொண்டதை அடுத்தே மறியல் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரயாணிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து பஸ் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

[வ]

## யாழ்.குடாநாட்டு மக்கள்

# மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றை தட்டுப்பாடின்றி பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு தேவையான அளவு மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றை தட்டுப்பாடின்றி கிடைக்க ஆவன செய்யுமாறு யாழ் சிவில் நிர்வாக அதிகாரி மேலதிக அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக யாழ் சிவில் அலுவலகத்தில் மேலதிக அரச அதிபர் து. வைத்தியலிங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் யாழ்.சிவில் அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்செயற்பாடு மூலம் எரிபொருளிற்கான தட்டுப்பாடு நீங்குவதற்கான சத்திய முள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பெற்றோலும் வெகுவிரைவில் தாராளமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (க-3)

# ஹபரணைப் பகுதியில் அட்டகாசம் புரிந்துவந்த குருட்டுயானை பிடிபட்டது

(கொழும்பு)

ஹபரணைப் பகுதி குடிமனைகளில் அட்டகாசம் புரிந்து வந்த குருட்டுயானை வன இலாகா அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக, அதிகாரிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் ஹபரணவாவிக்கு அருகில் வைத்து உணர்விழக்கச் செய்து யானையைப் பிடித்துள்ளனர்.

9 அடி 8 அங்குல உயர

## புசல்லாவையில்

# அடையாளம் காணப்பட்ட சடலம் வவுனியா வாசியினுடையதே

படும் வீட்டுக் குப்பைகளில் பெருமளவில் பொலித்தீன் பைகளும், பால்மாப் பைகளும் காணப்பவதால் அவை உக்கிப் பசளையாக மாறாது தமது விவசாய நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறாக இருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அன்றாடப் பாவனைப் பொருட்களில் பல, பொலித்

## வவுனியா வாசியினுடையதே

### மனைவி சாட்சியம்

(வவுனியா)

கடந்த் 4 ஆம்திகதி, புசல்லாவ ஆற்றங்கரையோரம் சிதைந்தநிலையில் காணப்பட்ட ஆணின்சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

வவுனியா குட்செற் வீதியைச்சேர்ந்த கதிரேசன் கணபதியினுடையதுஎன அவரது மனைவி அடையாளம் காட்டியுள்ளார்.

முச்சக்கர வண்டிச் சாரதியான கணபதி, கடந்தமாதம் 27 ஆம் திகதி, நபர்ஒருவரால் முச்சக்கரவண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டு கண்டிக்குச் சென்றுள்ளதாகவும், அன்று முதல் இவரை காணாமல் தேடிவருவதாகவும் அவருடைய மனைவி தெரிவித்துள்ளார்.

இதேசமயம், முச்சக்கரவண்டிச்சாரதி கணபதி கொடூரமானமுறையில் கொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் அவரது உடலில் காணப்படுவதாக இக்கொலைதொடர்பான விசாரணைகளை நடத்திவரும் பொலிஸ்தரப்பினர் தெரிவித்துள்ளதுடன், திட்டமிட்டு இக்கொலை நடந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவருடைய சக்கரவண்டியும் காணாமல்போயுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

---

புர்ந்து வந்த குருட்டுயானை வன இலாகா அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருமாதகாலமாக, இரண்டு கண்களும் குருடான மேற்படி யானை ஹபரணைப் பகுதி குடிமனைகளில் புகுந்து 30 இற்கும் மேற்பட்ட வீடுகளை சேதப்படுத்தியுள்ளது.

மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட வன இலாகா உணர்விழக்கச் செய்து யானையைப் பிடித்துள்ளனர்.

9 அடி 8 அங்குல உயரமான, இலங்கையில் உள்ள பெரிய யானைகள் ரகத்தைச் சேர்ந்த இவ் யானையின் உடலில், 500 க்கு மேற்பட்ட சன்னங்கள் இருந்ததாகவும், தற்போது தேசிய யானைகள் சரணாலயத்தில் விடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## சபையை விட்டு ரணில் வெளியேறினார்

(கொழும்பு)

அரசியல் சீர்திருத்தம் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்த சமயம் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சபையை விட்டு வெளியேறினார்.

ஆளும் கட்சி எம். பி. ஒருவர் ரணிலைப் பார்த்து கட்சிகளுடன் மும்முனைப் பேச்சு நடத்த தாங்கள் மறுத்த விடயத்தை மறைத்துப் பேசியது ஏன்? எனக் கேள்வி கேட்டபோதே ரணில் சபையை விட்டு வெளியேறினார். (ந)

### யாழ்.பல்கலை(வெளிவாரி)

## முதற்கலை தேர்வு பெறுபேறுகள் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகவெளிவாரிப் பிரிவினரால் நடாத்தப்படும்முதற்கலைத்தேர்வுப் பரீட்சை பெறுபேறுகள் எதிர் வரும் வியாழக்கிழமை வெளிவரலாம் என மேற்படிபல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிவாரிப்பிரிவினரால் நடாத்தப்பட்டு வரும் வணிக முதல் தேர்வு அண்மையில் வெளியிடப்பட்டது தெரிந்ததே. (க)

## பஞ்சாப் முன்னாள் பொலிஸ் ஆணையாளர் ஹில் திடீர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

இந்தியாவின் பஞ்சாப் மாநில முன்னாள் பொலிஸ் தலைமை ஆணையாளர் ஹில், மீண்டும் கடந்த சனிக்கிழமை தலைநகர் கொழும்பு வந்திருப்பதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

முப்படைகளினதும், பொலிஸாரினதும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவவும், குறிப்பாக தலைநகரில் உள்ள முக்கிய அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காகவுமே, ஹில் கொழும்பு வந்திருப்பதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வருடத் தொடக்கத்தில் தனிப்பட்ட விஜயமாக கொழும்பு வந்த இவர் தற்போது அதிகாரிகள் குழு ஒன்றுடன் கொழும்பு வந்திருப்பதாகவும், ஸ்ரீலங்காவின் புலனாய்வுத் துறையினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளைச் சந்தித்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம், இலங்கைப் படையினர்க்கு உயர்ந்ததரத்திலான யுத்தப்பயிற்சிகளை வழங்குவதற்கு, அமெரிக்க இலங்கை கூட்டு இராணுவப் பயிற்சிக்கு கடந்த 31 ஆம் திகதி முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளமை தெரிந்ததே. (உ)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல. 22

ஆக்கம் : தர்மினி

பின்வரும் சொற்களிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக?

1. அடவி:
2. அம்புயம்:
3. பகழி:
4: குருதி:
5; நயனம்:

இடம் மாறியுள்ள வாக்கியங்களை ஒழுங்கான வாக்கியங்களாக மாற்றி அமைக்குக.

6; இருந்தும்/கண்கள்/குருடனாய்/இருந்தான்/அவன்;
7. காட்டி/வானில்/ உதித்தான் / கிழக்கு / பொழுதில்/விடி காலைப்/சூரியன்/அழகினை.
8. உதைபந்தாட்டம்/ஆடினார்கள்/மைதானத்தில்/ மாணவர்கள்/பாடசாலை/விளையாட்டு
9. கள்ள/கறுப்பு/பூனையை/கணபதி/வெட்டிக்/கத்தியால்/கொன்றான்.
10. பிறந்தநாளை/வெகு/நான்/விமர்சையாக/எனது/கொண்டாடினேன்:

பின்வரும் தமிழ் சொற்களிற்குரிய ஆங்கில சொற்களை எழுதுக.

11: பறவைகள்
12. பல்
13. மின்னுமிழ்
14: பரிசு
15. வானவில்

பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

16. எண்ணெய் வளம் அதிகமுள்ள நாடுகளின் கூட்டமைப்பு எது?
1: ஒபேக் 2. சார்க் 3. கொழும்பு
17: உலகில் உள்ள மிக நீண்ட நதி எது?
1. மகாவலி 2. நைல் 3. அமூர்நதி
18; இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற அஜந்தா ஓவியத்தை ஒத்த இந்தியாவிலுள்ள பிரபல்ய ஓவியம் எது?
1) சித்தன்னவாசல் 2) அஜந்தா 3) எலாறா
19; உலகப் புகழ் பெற்ற மொனலிஸா ஓவியத்தை வரைந்தவர் யார்?
1) அரிஸ்ரோட்டில் 2) லியானோடாவின்சி
3) பிக்காசோ

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புக

20; தின—கு——பு
21. வி—டக—
22. —ல—ப்ப—இல்
24; சி—வ——ன்
25. பட்——பூ—சி
26. முகுந்தன், வசந்தன், சுகந்தன் ஆகிய மூவரும் தம்மிடையே உள்ள பணத்தைப் பங்கிட்டுக் கொண்டார்கள். முகுந்தனும் வசந்தனும் பெற்றதைவிட,வசந்தனும் சுகந்தனும் பெற்றது குறைவு. முகுந்தனும் சுகந்தனும் பெற்றது, வசந்தனும் சுகந்தனும் பெற்றதை விடக் குறைவு. இதில் யார் கூடிய பணம் பெற்றார்

29. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:
1) வயலுக்கு வரம்பு போல வளவுக்கு ————
2) நெல்லுக்கு நாற்றுப்போல சோளத்திற்கு ————
3) கிளிக்குப் பிள்ளை போல குரங்குக்கு ————

30. பின்வருவனவற்றை சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் குறிக்க.
i) உழவனின் எதிர்பால் கிழவி ஆகும் ( )
ii) சூரியனை முதலில் தொட்டவர் நீல் ஆம்ஸ்ரோங் ஆவர் ( )
iii) இலங்கையை இராவணன் ஆண்டான் ( )
iv) பருப்பில் புரதம் உண்டு ( )
v) மலையகத்தில் தேயிலை வளரும் ( )

31. பின்வரும் தலைப்புப் பற்றி 5 வசனம் எழுதுக:
''கணனியின் பயன்பாடு''

(1) ————————————
(2) ————————————
(3) ————————————
(4) ————————————
(5) ————————————

குறிப்பு:-

இதற்கான விடைகளை 10 - 08 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

## தரம் ஐந்து புலமைப் பரீட்சை வினா இல. 21

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

01) பா. சாரங்கன்
யா/ புனித ஜோன் பொஸ்கோ
02) இ. தணிகைவாசன்
யா/ புனித ஜோண் பொஸ்கோ
03) கை. தனுஜன்
யா/ பரியோவான் கல்லூரி
04) நி. ஹரிலோஜுனன்
புனித ஜோண் பொஸ்கோ
05) தி: ராஜ்கண்ணா
யா/இந்து ஆரம்பப் பாடசாலை
06) சி. தவசீலன்
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
07) சி. டினேசன்
உடுவில் மகளிர் கல்லூரி
08) து. தியாகராஜா
யா/புனித சென் ஜோண் பொஸ்கோ
09) க. நிரோஷன்
யா/ அராலி ச. மகா: வித்தியாலயம்
10) சி. பிரகாஷ்
சி, கிருஷாந்தன்
ச.ப. வித்தியாலயம்
11) பா. கோபிசங்கர்
யா/ உடுவில் மான்ஸ் ம.வி
12) க: சயந்தன்
உரும்பிராய் சைவத் தமிழ்
13) தே. சம்யுக்தா
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்

பாடசாலை
18) ம. மதியூகி
சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை
19) சி. கிருபாலினி
அராலி மத்தி வட்டுக் கோட்டை
20) து. நிருத்திகா
யாழ்ப்பாணக் கல்லூரி
21) கு. தேனுஜா
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
22) சி. துவாரகா
யா/மணியகாரன் தோட்டப் பாடசாலை
23) த. சுமிதா
யா/ துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை
24) கு: அஜந்தா
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
25) ச. சுபதர்சினி
யா/ தியாகராசா ம.ம: வித்தியாலயம்
26) இ. மாதங்கி
யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
27) வெ. மேகலா
யா/ தியாகராசா ம.ம. வித்தியாலயம்
28) கு மீருஜா
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
29) தி: வினோதா
யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ வித்தியாலயம்
30) சி. அனுசலா
யா/ உயரப்புலம் குண

யா/ மணியகாரன் தோட்டப் பாடசாலை
35) வ. தர்மதா
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
36) சி. நிலானி
துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
37) ஆ. சோபனா
அத்தியர் இந்துக்கல்லூரி
38) சு. பிரிஜந்தி
யா/உடுவில் மான்ஸ் ம.வி
39) கோ. சுலோஜனா
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்.
40) ர. கௌதமி
யா/இராமநாதன் கல்லூரி.
41) ச: வித்யா
யா/ஞானாசாரியார் கல்லூரி.
42) மு· பிரணவன்
யா/துன்னாலை காசிநாதன் வித்தியாலயம்.
43) லோ. தர்சினி
றோ.க.த.க பாடசாலை சுன்னாகம்
44) ச. சிவகுமார்
யாழ்ப்பாண கல்லூரி வட்டுக்கோட்டை.
45) சி. சிறிசாந்
உடுவில் மகளிர் கல்லூரி.
46) க. புருஷோத் சி· சி. தலவன் பாடசாலை கோண்டாவில்.
47) க. பாலகாந்தன்
யா/மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை.

## புலமைப் பரீட்சை வினா இல. 21 இன் விடைகள்

1) சர்க்கரை
2) தென்னை
3) கதவு
4) மான்
5) அருவி
6) உருவம்
7) பலர்
8) வெறுப்பு
9) அங்கே
10) கருமை
11) SIVAM
12) காந்தன்
13) K SIVAM
14) மழை வரப்போகிறது
15) நுழைவுச்சீட்டு
16) சிங்கம்
17) யானை
18) மயில்
19) ஆந்தை
20) 5 மணி
21) ரூபா 115
22) ரூபா 42
23) ரூபா 36
24) 4 Kg
25) (i) ரூபா 160
(ii) ரூபா 17.50
(iii) ரூபா 12
(iv) ரூபா 90
(v) 279 50

னும் சுகந்தனும் பெற்றது குறைவு. முகுந்தனும் சுகந்தனும் பெற்றது, வசந்தனும் சுகந்தனும் பெற்றதை விடக் குறைவு இதில் யார் கூடிய பணம் பெற்றார்

27; கிராமியச் சந்தையொன்றில் சில பொருட்களின் மாரி கால, கோடைகால விலைப்பட்டியல் பின்வருமாறு

| பொருட்கள் | மாரிகாலவிலை | கோடை காலவிலை |
|---|---|---|
| அரிசி | 1 Kg 22.00 | 20.00 |
| மீன் | 1 Kg 100.00 | 80.00 |
| மா | 1 Kg 22.00 | 20.00 |
| சீனி | 1 Kg 32.00 | 32.00 |
| பருப்பு | 1 Kg 40.00 | 37.00 |
| உருளைக்கிழங்கு | 1 Kg 40.00 | 35.00 |

I) மேலுள்ள அட்டவணையின் படி மாரி காலத்தை விட கோடை காலத்தில் விலை குறைத்து விற்கப்படும் பொருட்கள் எவை?

II) இரு பருவ காலங்களிலும் சமமான விலைகளில் விற்கும் பொருட்கள் எவை?

III) மேலுள்ள விலைப்பட்டியலின் படிகீழுள்ள அட்டவணையினைப் பூர்த்தி செய்க:

கோடை காலப் பற்றுச் சீட்டு

| அளவு | விபரம் | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 1 Kg | அரிசி | ——— | —— |
| 2 Kg | சீனி | ——— | —— |
| 500g | உருளைக்கிழங்கு | ——— | —— |
| 250g | பருப்பு | ——— | —— |
| | மொத்தம் | ——— | —— |

28. இறிட்ட இடங்களை நிரப்புக?

1) 4, 8, 12, 16 ___ ___ ___
2) 100, 90, 80 ___ ___ ___
3) 34, 44, 54, ___ ___ ___
4) 5, 10, 16, 23 ___ ___ ___
5) 35, 42, 49 ___ ___ ___

13) தே. சம்யுக்தா
யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்

14) சி. சிவறஞ்சினி
யா/ தா.இ.த.க பாடசாலை

15) வ. பகீரதி
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

16) உ. தனுஜா
யா/ வசாவிளான் ம.ம வித்தியாலயம்

17) சா. தர்சினி
யா/சங்குவேலி அ.த.க

ஸ்ரீ வித்தியாலயம்

30) சி. அனுசலா
யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்

31) வி. யதுகுலா
யா/ இந்து ம.ஆ பாடசாலை

32) உ. சாளினி
நாரந்தனை கணேச வித்தியாலயம்

33) பு. ஜீவனா
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

34) அ. சசிகலா

47) க. பாலகாந்தன
யா/மகாஜனாக் கல்லூரி
தெல்லிப்பளை.

## கல்விப் பகுதி வினா இல. 22

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்;

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

இம் மாதம் 2 ஆம் திகதி கிளாலிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலின் போது,

★ மேஜர் அறிவுமணி (தெய்வேந்திரன் மன்மதநாதன்) யாழ்ப்பாணம்

என்ற போராளியும் கடந்த 5 ஆம் திகதி இடம் பெற்ற தவறுதலான வெடிவிபத்தின் போது

★ மேஜர் வெண்ணிலா (ஜீ போரிஸ் எரினா யுலக்சி) யாழ்ப்பாணம்

★ லெப். மலைமகள் (தம்பிராஜா ஜமுனா) யாழ்ப்பாணம்

என்ற போராளிகளும் நேற்று முன்தினம் நாவற்குழிப் பகுதியில் ஏற்பட்ட மோதலின் போது

★ லெப். அமுதினி (ஜீவரட்ணம் சயப்பிரியா) மட்டக்களப்பு

என்ற போராளியும் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்:

## இன்று ஒரு தகவல்

# "எப்பொருள் யார்வாய் கேட்பினும்; ஆராயவேண்டும்!"

ஒரு பெரிய பண்டிதர் இருந்தார். வேதங்கள் எல்லாம் படித்துக் கரை கண்டவர். ஒரு புண்ணிய காலத்திலே கடலில் நீராடுவதற்காகப் போனார். அவர் கையில் ஒரு தீர்த்த பாத்திரம் வைத்திருந்தார். அதைக் கரையில் எந்த இடத்தில் வைத்துவிட்டுப் போகலாம் என்று யோசித்தார்.

மணலில் ஒருகுழி தோண்டினார். அந்தப்பாத்திரத்தை பத்திரமாக வைத்து புதைத்தார். அந்த இடம் ஞாபகம் இருக்க வேண்டும் என்பதற்காக, அடையாளத்துக்காக மணலை மூட்டா சேர்த்துக் குவித்து வைத்தார். அதை அப்படி வைத்து விட்டு போனார்.

அவர் திரும்பி வந்துபார்த்த போது புதைத்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன் தெரியுமா? அந்தக் கடற்கரை பூராகவும் ஆயிரக்கணக்கான மணல் மேடுகள். எப்படி வந்தன என நினைக்கிறீர்களா?

இவர் மணலை மேடாக குவித்து வைத்ததை ஒருவர் பார்த்தார். அவ்வளவுதான் சரி அதுவே ஏதோ அர்த்தம் இருக்கு என்று முடிவு பண்ணினார்.

ஒரு பெரிய பண்டிதர் இப்படிப் பண்ணினால் இதில் ஏதோ ஐதிகம் இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

உடனே அவரும் மணலில் ஒரு பேடுகட்டி வைத்துவிட்டு குளிக்கப்போனார். இதைப் பார்த்த இன்னொருவர் அதைப் பார்த்த இன்னொருவர்...... கடைசியில் கடற்கரை பூராகவும் மணல் மேடுகள்! ஜனங்கள் சேர்ந்து பண்டிதரையே குழப்ப வைத்து விட்டார்கள். பாத்திரத்தை புதைத்த இடம் தெரியாத அளவுக்கு இதைப்பற்றி அந்தப் புலவர் ஒரு சுலோகமே பாடியுள்ளார்.

''கதாநு கதிகோ லோகே நலோக பரமார்த்திகா கேதென ஸைகத லிங்கேந. நஷ்டமும் தாம்ப்ரபாஜனம்''.

இந்த உலகத்திலே ஜனங்களிடம் ஆராச்சி குறைந்தது. இதை ஏன் செய்யணும் என்ற சிந்தனை இல்லை! நான்

லேயே ஒரு ஓரமா நின்னுகிட்டிருந்தது - தயங்கிக்கிட்டே ஏம்மா நிக்கிறேன்னு கேட்டார். துறவி 'அந்தப் பக்கம் போகணும்...... எப்படிப் போறதுன்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்'

அப்படின்னு அந்தப் பொண்ணு! உடனே அந்தத் துறவி 'கவலைப்படாதேம்மா நான் உதவி பண்றேன்னார்!'' அந்தப் பொண்ணை தன்னோட தோள்லே சுமந்து கொண்டு போய் அடுத்த பக்கத்திலே விட்டார். சிஷ்யனுக்கு அதிர்ச்சி. ஒரு துறவி ஒரு இளம்பெண்ணைத் தொட்டுத் தூக்கிறது சரிதானா? - அவனுக்கு குழப்பம்! இருந்தாலும் உடனடியா கேட்கவில்லை.

ரொம்பநேரம்கடந்து ஒரு இடத்துக்கு வந்துசேர்ந்தார்கள். சிஷ்யனுக்கு அதிர்ச்சி சிஷ்யன் முகம் ஒருமாதிரியாக இருந்தது!

''என்ன யோசிக்கிறே? என்று கேட்டார்துறவி

'சுவாமி! ஒருஇளப்பெண்ணை தொட்டு தோள்லே சுமந்துகொண்டு நடக்கிறது சரிதானா?'

இது சிஷ்யனோடகேள்வி! இதுக்கு அந்தத்துறவி அமைதியாக பதில் சொன்னார்.

நான் அந்தப்பெண்ணை அப்பவே தோள்லேயிருந்து இறக்கிவிட்டுட்டேன்! நீ இன்னுமா சுமந்துகிட்டிருக்கே? அப்படின்னார்.

இந்த ரெண்டு நிகழ்ச்சிகள் மூலமா நான்சொல்லவந்தது இதுதான்,

இந்த உலகத்திலே கண்ணை ஒரேடியா மூடிக்கிட்டு ஒருத்தருக்குப் பின்னாடி போறதும்தப்பு, கண்ணை ஒரேடியா திறந்துகிட்டே ஒருத்தருபின்னாடி போறதும்தப்பு.

ஒருபக்திஎன்பது சாதாரண விஷயமில்லை! பெரிய விஷயம்ஆனாலும் குரு குருவாக இருக்கணும். சீடன் சீடனாக இருக்கணும் அதுதான் முக்கியம் அப்படி இல்லாவிட்டால் விவகாரம்வேறு மாதிரி ஆகிவிடும்.

## அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்விசாரா ஊழியர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கு இன்று புதன் கிழமை நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் வளஆளணியினராக கணக்காளர் கே. இராசநாயகம் நிர்வாக உத்தியோகத்தர்களான இ. தவராஜா வி. வீரபத்திரபிள்ளை. கே. இராஜதுரை ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

கல்லூரியின் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் காலை 8. 30 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு உபபீடாதிபதி(நிர்வாகம்) திரு. எஸ். ஆர். சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

(க)

## மூதாட்டி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் 70வயதுடைய மூதாட்டி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

யாழ். மருத்துவ மனைக்கு இப் பெண்மணியின் சடலம் எடுத்து வரப்பட்டது.

முஸ்லிம்கல்லூரிவீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரவேலு நாகமுத்து என்பவரே இவ்வாறு இறந்தவர் என்று கூறப்பட்டுள்ளது.

(க-12)

## மீனவர் கரை திரும்பினர்

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை உடனடியாக கரை திரும்புமாறு இராணுவத்தினர் பணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது கடற்பகுதியில் இனம்தெரியாத சிலர் ஊடுருவி இருப்பதாககிடைத்த தகவலின் பேரிலேயே மீனவர்களைத்திருப்பி அழைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

[ந-7]

## விபத்தில் காயம்

(அரியாலை)

நல்லூர் கோவில் வீதியில் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் சிக்கி காலில் காயமடைந்த சுப்பிரமணியம் மனோகரன் (வயது 36) என்பவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்

## நல்லூரான் திருவடிக்கு - 05



### நல்லூர்க்கந்தன் பாமாலை

ஆடியிலே நல்லூரின் ஆரம்ப உற்சவத்தைத்
தேடி வருமடியார் கூட்டங்கள் — பாடியே
ஆர்ப்பரித்துக் கூறும் அரோகரா வேல் முருகா
ஈர்க்கும் இறையருளை இங்கு:

தூரத்தூர் மக்கள் சிலர் பாதயாத்திரையாய்ச்
சேர வழியிலே சேரும்மற் — றாரவரும்
கூடி வருவார்கள் குமரன் விழாக்காண
நாடியே நல்லூர் நயந்து.

சி. இராசரத்தினம்
(இறைமணி)

### நல்லையிலே உன்ஆட்சி நிலைநாட்டு

தொல்லைகளை நீ தீர்த்து துயர்ஓட்டு — முருகா
தொன்மையினை நிலைநாட்டி அருள்கூட்டு
எல்லைகளை நீ காத்து எழில் காட்டு
என்றும் நல்லையிலே உன் ஆட்சி நிலைநாட்டு

மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

### நல்லைப்பதியில் தொல்லைகள் அகற்றும் சுடர் வேலவனே!

''நம்பித்தொழுமடியார் ஞானவிளக்கே
நாவலர் கண்ட நற்றமிழ்த் தலைவா
சேவற் கொடியுடை செவ்வேள் முருகா
நல்லைப்பதியில் தொல்லையகற்றும் சுடர்வேலவனே
அல்லற்ப்படுத்தும் எம்பிணி அகல
அயில்வேல் முருகா ஆண்டருள் புரிவாய்.

வேலணை பாலா

### நல்லூரான் சரணம்

நல்லைக்கந்தா சரணம் சரணம்
நான்கு தமிழின் வேந்தா சரணம் சரணம்
வள்ளி தெய்வானை மணாளா சரணம் சரணம்
வாரண முகத்தோன் அண்ணலே சரணம் சரணம்
புள்ளி மயில் வாகனா சரணம் சரணம்
புன்னகை சிந்தும் தேவனே சரணம் சரணம்

எல்லைகள் காக்கும் வீரனே சரணம் சரணம்
ஏழைகளைத் தூக்கும் குமரனே சரணம் சரணம்
சூரனை வென்ற வேலனே சரணம் சரணம்
சுதந்திர வாழ்வின் காவலனே சரணம் சரணம்
இருளை அழிக்கும் முருகா சரணம் சரணம்
இல்லாமை அகற்றும் முருகா சரணம் சரணம்

வம்.

இந்த உலகத்திலே ஜனங்களிடம் ஆராச்சி குறைந்தது. இதை ஏன் செய்யனும் என்ற சிந்தனை இல்லை! நான் பாத்திரத்தை புதைத்து வைத்த இடத்திற்கு அடையாளமா மணலை லிங்கம் மாதிரி குவித்து வைத்தேன் இப்ப பார்த்தா ஆயிரமாயிரம் லிங்கங்கள் என் பாத்திரத்தை எப்படி தோண்டி எடுப்பேன்? தாமிரபாத்திரம் நஷ்டமாயிட்டுதே அப்படி என்று பாடினார்.

பெரியவர்கள் போகும் வழியிலே ஏன் எதுக்கு என்று கேக்காமல் போவது நல்லது தான் அதுக்காக இப்படியா?

இன்னொரு ''சிஷ்யர்'' இருந்தார். அவர் எப்படித் தெரியுமா?

எதுவா இருந்தாலும் 'ஏன்' ''எப்படி'' என்று கேட்காமல் இருக்கமாட்டார். எடுத்ததுக் கெல்லாம் சந்தேகப் படுவார் தன்னோடு 'குரு' ஒரு துறவி. அவரையே சந்தேகக் கண்ணோடுபார்க்கிறவர் என்று அந்தத் துறவியும் இந்த சிஷ்யனும் ஒரு காட்டு வழியாகப் போய்க்கிட்டிருந்தாங்க வழியிலே ஒரு இடம் சேறும் சகதியுமாக இருந்தது அந்த இடத்தைத் தாண்டி இவர்கள் போகணும்.

அங்கே ஒரு சின்ன பொண்ணு இந்தப் பக்கத்தி இருக்கணும் அதுதான் முக்கியம் அப்படி இல்லாவிட்டால் விவகாரம்வேறு மாதிரி ஆகிவிடும்.

ஒருசீடன் இருந்தான் கையிலே நீளமா ஒரு ஒட்டைக்குச்சியை வச்சிக்கிட்டு வானத்தைநோக்கி இடிக்கிற மாரி குத்திக்கொண்டிருந்தான்குரு இதைப்பார்த்தார் என்னப்பா செய்யறேன்னு கேட்டார்;

அந்த நட்சத்திரத்தையெல்லாம் இந்தக்குச்சியாலே குத்தி கீழே தள்ளப் போறேன்!' என்றான் சீடன்

குருவுக்கு கோபம்வந்தது சரியான முட்டாளாக இருக்கிறாயே! என்னுடைய சிஷ்யன்என்று உன்னைச்சொல்ல எனக்கு வெக்கமாய்இருக்குது என்றார். சிஷ்யன் கையைக் கட்டிக்கிட்டு பவ்யமாய் நின்றான். குரு வழிசொல்லிக் குடுத்தார். முட்டாளே! போய் அந்தகூரைமேலே ஏறி நின்று இடிஎன்றார்.

சான்றோர்கள், பெரியோர்கள் கூறினார்கள். என்பதற்காய் அது எப்படிப்பட்ட கருத்தையாயினும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. அதைப் பற்றி கூர்ந்து ஆராய்ந்து அறிந்து எங்கள் மனசாட்சிக்கு அறிவிற்கு சரியென்பதையே ஏற்கவேண்டும்.

தென்கச்சி சுவாமிநாதன்

---

கிள் விபத்தில் சிக்கி காலில் காயமடைந்த சுப்பிரமணியம் மனோகரன் (வயது 36) என்பவர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களினால் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(த-106)

## கடல் தொழிலாளர்க்கு வீடு

(கொழும்பு)

கடற்றொழிலாளர் குடும்பங்கள்ஒவ்வொன்றுக்கும் குடியிருப்பதற்குச் சொந்த வீடு அமைத்துக்கொடுக்கப்படும் என மீன்பிடி நீர்வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

மீனவத் தொழிலை அங்கீகரிக்கப்பட்ட தொழிலாக மாற்றியமைப்பதுடன், அவர்களுடைய பொருளாதார வளத்தினை மேம்படுத்தும் திட்டங்கள் உருவாக்கப்படவிருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார் (உ)

## உற்சவம்

(மல்லாகம்)

இணுவில் மேற்கு வேம்படி அருள்மிகு ஞான வைரவர் கோயில் உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமைஆரம்பமாகியது.

இவ்வுற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் நடைபெறும் (த-14)

---

சூரனை வென்ற வேலனே சரணம் சரணம்
சுதந்திர வாழ்வின் காவலனே சரணம் சரணம்

இருளை அழிக்கும் முருகா சரணம் சரணம்
இல்லாமை அகற்றும் முருகா சரணம் சரணம்

முடிவே இல்லாத முதலே சரணம் சரணம்
அழிவே இல்லாத அழகே சரணம் சரணம்

உலக மக்களின் முழுமையே சரணம் சரணம்
இளைய பூக்களில் இளமையே சரணம் சரணம்

நல்லூர் மண்ணின் காவலனே சரணம் சரணம்
வெல்லும் தமிழின் வேலவனே சரணம் சரணம்

மல்லிகைப் பூக்களின் மன்னவனே சரணம் சரணம்
மௌன நாட்களின் விண்ணவனே சரணம் சரணம்

புள்ளி மயிலின் புகழே சரணம் சரணம்
புதிய தமிழின் அழகே சரணம் சரணம்

கல்வி உலகில் கனியே சரணம்
கன்னிப் பெண்களின் காவலே சரணம் சரணம்

பூக்களில் வாழும் புரட்சியே சரணம் சரணம்
புதுமைகள் ஆளும் மலர்ச்சியே சரணம் சரணம்

காதல் நிலவே சரணம் சரணம்
கவிதை அழகே சரணம் சரணம்

நாளைய வாழ்வே சரணம் சரணம்
நம்பிக்கை ஒளியே சரணம் சரணம்

நாட்டினை ஆக்கும் ஒளியே சரணம் சரணம்
நம்பிடும் நாட்களின் வழியே சரணம் சரணம்

பு. திலீப்காந்த்

---

## ஒருவருட சேவை பூர்த்தி

(மட்டக்களப்பு)

நீதி அரசியல் விவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் அனுசரணையுடன் இயங்கிவரும் மத்தியஸ்தர் சபைகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி மத்தியஸ்தசபை ஒருவருட சேவையை பூர்த்திசெய்துள்ளது.

கடந்த ஒருவருடகாலத்தில் முன்வைக்கப்பட்ட 261 பிரச்சினைகளில் 119 பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாக சபைத்தவிசாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரச்சினைகளில் 119 பிரச்சினைகளிற்கு தீர்வு காணப்படும். (க)

### வலதுசாரி அமைப்பின்,

# அலுவலகத்தில் புகுந்த ஆயுததாரிகள் சரமாரியான துப்பாக்கிச்சூடு

## ரோக்கியோவில் சம்பவம்

(ரோக்கியோ)

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள வலதுசாரி அமைப்பொன்றின் அலுவலகத்திற்குள் புகுந்த ஆயுதம் தரித்த நபர்கள் அங்கிருந்த இருவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் மேலும் ஆறுபேர் படுகாயங்களிற்கு உள்ளாகியுள்ளனர்.

துப்பாக்கிகள், கத்திகள் என்பன சகிதம், மேற்படி வலதுசாரி அமைப்பின் அலுவலகத்தில் புகுந்த 15பேர் கொண்ட குழுவினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையமூவரைரோக்கியோப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவத்துக்கு, இருபகுதியினரிடையேயும் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்பிணக்குகளே காரணமாய் இருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ)

# பிஜியின் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் இந்திய விஜயம் மேற்கொண்டார்

(புதுடில்லி)

பிஜி நாட்டின் பதவி நீக்கப்பட்ட பிரதமர் மகேந்திர சௌந்தரி இம் மாதம் 17 ம் திகதி புதுடில்லி வருகிறார்.

பிரதமர் வாஜ்பாய் இந்தியாவிற்கு விஜயம் செய்யுமபடி மகேந்திர சௌந்திரிடம் விடுத்த வேண்டுகோளை யடுத்தே இவர் வருகை தர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# சவுதியில் சொலை போதைவஸ்து கடத்தல் குற்றம்புரிந்த இருவருக்கு மரணதண்டனை

(றியாட்)

சவுதி அரேபியாவில் அண்மையில் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதைவஸ்து கடத்திய குற்றத்திற்காக சவுதி அரேபியாவைச் சேர்ந்த ஒருவருக்கும், கொலைக் குற்றத்திற்காக பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில், சவூதி அரேபிய அரசு 99 பேருககு பல்வேறு குற்றங்களுக்காக மரணதண்டனை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ

# இந்திய விமானப் படைக்கு நவீன போர் விமானங்கள்

[புதுடில்லி]

இந்திய விமானப்படை பிரிட்டனிடமிருந்துஅதிநவீன போர் பயிற்சி விமானங்களை கொள்வனவு செய்ய உள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன:

தொழில் நுட்ப அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டு குறித்த பேச்சுகள் முடியும் தறுவாயில் இருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் பெணாண்டஸ் அறிவித்துள்ளார். (து)

# ஈரான்-ஈராக் யுத்த முடிவு தினம் மாபெரும் வெற்றி நாளாகபிரகடனம்

(டெஹ்ரான்)

ஈரான்-ஈராக் யுத்தம் முடிவுற்ற 12 ஆம் ஆண்டுநினைவு நாளை மாபெரும் வெற்றி நாளாக ஈரான் அறிவித்துள்ளது.

1988 ஆம் வருடம் ஒகஸ்ட் ... நிகழ்த்தினர்.

1980 ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற ஈரான்-ஈராக் யுத்தம் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடனும் வேண்டுகோட்படியும் முடிவுக்கு

காஷ்மீர் பயங்கரவாதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு

# நிபந்தனைகள் எதுவும் இல்லை

## பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

[புதுடில்லி]

காஷ்மீரில் பயங்கரவாதக் குழுக்களுடன் பேச்சு நடத்துவதற்கு முன்நிபந்தனை



எதுவும் விதிக்கப்படமாட்டாது என பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

அரசியல்சாசன கட்டமைப்புக்குள் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதையே இந்தியா விரும்புகின்றது என மேலும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் அரசியல் சாசனத்துக்கு அப்பால் நின்று எதிர்ப்புக்களைக் காட்டினாலும் சமாதானப் பேச்சுக்கள் தடைபடாமல் தொடரும் என்றும் அவர் தெளிவுபடக் கூறினார்.

எனினும் படுகொலைகள் பற்றிய தகவல்கள் விரைவில் வெளியாகும் பொருட்டு நிருவாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய பிரதமர் நீதிவிசாரணைக்கான கோரிக்கையை நிராகரித்தார். (உ)

## தனிநாடு கோரும் கூர்க்கா இனம்.

(புதுடில்லி)

தனிநாடு கேட்கும் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி அமைப்பினர் தஞ்ஜேமலைத் தொடர்களில் 48 மணிநேர கதவடைப்பு அறிவித்துள்ளனர்.

இந்த முழுக்கதவடைப்பானது தமது கோரிக்கைகள் மத்திய அரசு ஆர்வமின்றி இருப்பதாலும், மௌனம் சாதிப்பதாலுமே என்றுதெரிவிக்கப்படுகிறது. (து)

# மலேசிய நிதி அமைச்சருக்கு விரைவில் சிறை வாசம்

(கோலாலம்பூர்)

மலேசிய நிதி அமைச்சருக்கு விரைவில் சிறைத் தண்டனை வழங்கப்படலாமென நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகாத உறவு இவர் மேற்கொண்டதாக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை விரைவில் முடிவிற்கு வரும் என்றும் அவ்வழக்கின் தீர்ப்பு பெரும்பாலும் இவருக்கு பாதகமாகவே அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

40 வயதை இவர் தாண்டிய படியால் கசையடிகள் இவருக்கு வழங்கப்படமாட்டாது என்றும் மேலும் அறியப்படுகிறது.

இதேவேளையில் அமைச்சருக்கு 9 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாக நேற்றைய பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (க-து)

உலக தரிசனம்

## இலவச தொலைபெசி

(சென்னை)

இலட்சதீவில் குற்ற நடவடிக்கைகள் குறித்த தகவல்களை அளிக்க இலவச தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த தகவல்களை அவிப்போர் தம்மை இனம்காட்டத் தேவையில்லை என்று இலட்சத்தீவுப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீபகற்பத்தில் இருக்கும் எல்லாத்தீவுகளுக்கும் இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. (து)

செய்திப்பரல்

★ உலக நிலவியல் மகாநாடு சீனாவில் ஆரம்ப

# இந்தோனேசியாவிடம் இருந்து தன்னாட்சி பெறும் இரியங்காயா

(ஜகார்த்தா)

இந்தோனேசியா இரியங்காயா மாநிலத்துக்குசிறப்புத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட உள்ளது:

இந்தோனேசியாவில் தனி மாநிலமாக கணிக்கப்பட்ட இரியங்காயா தனிநாட்டுப் போராட்டத்தை நடத்திவந்தது தெரிந்ததே.

கிழக்குத் தீமோரைப் போலத்தனி நாடாக செல்வதற்கரன கோரிக்கையை இரியங்காயா முன்வந்துள்ளது.

இந்நிலையில் இரியங்காயா மக்கள் தனிநாடு பெறுவதைத் தடுப்பதற்காக இதற்குதன்னாட்சியுரிமையை வழங்க இந்தோனேசியா முன்வந்துள்ளது.

நீயூ கினியாத்தீவின் ஒருபகுதியான இரியங்காயா 4இலட்சத்தி 22ஆயிரம் சதுரகிலோமீற்றர் பரப்புடையதாகும் 18 இலட்சம் மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

1963ல் இரியங்காயாவைத் தன் ஆட்சிக்குக் கீழ்கொண்டு வந்தஇந்தோனேசியா, இன்று அதற்கு தன்னாட்சி வழங்குவது குறிப்பிடத்தக்கது. (து)

# பாகிஸ்தானுக்கு உதவிபுரிந்தாராம் இந்திய படை பணியில் ஒருவர் கைது

வுற்ற 12 ஆம் ஆண்டுநினைவு நாளை மாபெரும் வெற்றி நாளாக ஈரான் அறிவித்துள்ளது.

1988 ஆம் வருடம் ஒகஸ்ட் மாதம் எட்டாம் திகதி முடிவுற்ற யுத்தத்தினை நினைவு கூரும் வகையில் 'ஈரான் அதிபர் சதாம் ஹுசேன் தொலைக்காட்சியில்தோன்றி நாட்டு மக்களுக்கு உரை ஆம் ஆண்டு வரை நடை பெற்ற ஈரான்-ஈராக் யுத்தம் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடனும் வேண்டுகோட்படியும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமையும் இவ் யுத்தத்தால் இரு நாட்டையும் சேர்ந்த 10 இலட்சம்பேர் கொல்லப்பட்டமையும் தெரிந்ததே. (உ)

## புகழ்பெற்ற இந்தியநடிகர் ராஜ்கபூரின் படவிழா அமெரிக்காவில்

(சிக்காக்கோ)

காலஞ்சென்ற புகழ்பெற்ற நடிகரும் இயக்குநருமான ராஜ்கபூரின், 10 நாள் படவிழாஒன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ளது,

சிக்காக்கோவில் நடைபெறஇருக்கும் இவ்விழாவில் 7 அனைத்துக்காலப்படைப்புகள் ஆங்கில விளக்கங்களுடன் திரையிடப்படும்.

இதையொட்டி பிரதமமந்திரி அடல்பிஹாரி வாஜ்பாய் விடுத்துள்ள செய்தியில்; தமது வாழ்நாளில் வரலாற்றுச் சிறப்புடையவரான ஒரு நடிகரும் இயக்குநரையும் இந்நிகழ்ச்சி கௌரவப்படுத்தும் பாக்கியம் கிடைத்தது என்றார்; (து)

★ உலக நிலவியல் மகாநாடு சீனாவில் ஆரம்பமாகியிருக்கின்றது'

★ பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக தெரியவருகிறது.

★ சத்தனமரக்கடத்தல் வீரப்பனின் கடிதம் கோபால் மூலம் இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

★ உலக சுகாதார ஸ்தாபன அறிக்கையின்படிஇந்தியாவின் சுகாதார நிலை பாகிஸ்தான் பங்களாதேஷைவிட மோசமாக உள்ளது என்ற கூற்றை இந்தியா மறுத்துள்ளது.

(து)

# பூட்டானில் பாரிய மண்சரிவு 200க்கும் மேற்பட்டோர் பலி!

(திம்பு)

பூட்டானில் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் 200க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது:

தொடர்ந்து பெய்த கடும் மழையை அடுத்து இம்மண் சரிவு ஏற்பட்டதாக தெரிய வருகிறது:

இதுவரை 150சடலங்கள் மீட்கப்பட்டன என்று பூட்டான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்;

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வீடு இழந்து தவிக்கின்றன;

நிவாரணப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் அறியப்படுகிறது

## பாகிஸ்தானுக்கு உதவிபுரிந்தாராம் இந்திய படையணியில் ஒருவர் கைது

இந்தியாவின் அகமட் நகரில் இராணுவ வாகன பகுதியில் பணியாற்றும் ஒரு ஊழியர் பாகிஸ்தனிய உளவு துறைக்கு உதவி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்

40 வயதான கமல் நாத்சிங் என்ற இவர் கம்பூட்டர் இணைய மூலமாக தகவல்களைச் கொடுத்தார். என்பதற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (து)

## பத்திரிகைச் சட்டத்தளர்வு குறித்து ஈரான் பாராளுமன்றில் அமளி துமளி

ஈரானில் பத்திரிகைச் சட்டங்களைத் தளர்த்துவது குறித்த தீர்மானங்கள் பற்றி உறுப்பினர்கள் விவாதிக்க வேண்டாம் என்று அந்நாட்டு உயர் தலைவர் ஆணையிட்ட பிறகு நேற்று அந் நாட்டு நாடாளுமன்றில் பெரும் அமளி துமளி தொடங்கியது.

ஆயத்தொல்லாகொமேய்னி இந்த உத்தரவை அறிவித்ததற்குப்பிறகு அதை எதிர்த்து சில உறுப்பினர்கள் சபையை விட்டுவெளியேறினதாக ஈரானின் அதிகார பூர்வ செய்தி நிறுவனம் அறிவிக்கிறது.

பத்திரிகைச் சட்ட திருத்தம் குறித்து வாசித்து தளர்த்த நாடாளுமன்றம் கூடியிருந்தது.

அதிபர் முகமட்கட்டாமியின் தலைமைக்கு எதிராக ஈரான் நாடு எடுத்த முயற்சி இது என அறிவிக்கப்படுகிறது. (து)

## இயந்திரத்திறன்

எதிர்காலத்தில் மனிதனைவிட இயந்திரங்கள் திறமை மிக்கவையாக இருக்கும் என்று பிரிட்டிஷ் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

நவீன தொழில்நுட்பம் காரணமாக 30 வருடங்களில் மாற்றங்கள் நிகழும்என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இன்னும் 10 ஆண்டுகளில் மனிதர்களைவிட கணனியின் அறிவாற்றல் மிஞ்சிவிடும்என்றும் மனிதனின் ஆற்றலைவிட இயந்திரத்தின் ஆற்றல் உலகுக்கு பெரும் தன்மையைக் கொடுக்கப் போகின்றனஎன்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-து)

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மை யான் உண்டிவ் வுலகு.

- குறள்

# வலம்புரி

## பழைய கதிரைகளில் புதிய முகங்கள்

தேர்தல் வரப்போகுது. அதற்கு முன் அமளி துமளிகளுக்கு மத்தியில் அரசமைப்புச் சீர்திருத்தம். எந்த ஒரு இலக்கை நோக்கி தியாகங்கள் புரியப்பட்டதோ அவை பூரணப்படுத்தப்பட்ட சீர்திருத்தமே மன நிறைவைத் தரும். நாட்டில் அமைதியையும் தரும்.

முகங்கள் புதியனவாக வருவதால் பழைய ரணங்கள் மாறுமா? இல்லையே? நோய் ஒன்றிருக்க இன்னொன்றிற்கு மருந்தா? என இன்னும் சில குரல்கள் சிணுங்குகின்றனவே. நாட்டின் நலனுக்கு நல்ல மருந்து ஏகோபித்த குரலில் எடுக்கப்படும் தீர்வுதான் என்பது சொல்லித் தெரிவதில்லை.

எங்கு பார்த்தாலும் குழப்பநிலை. அலையும் அக உணர்வுகள். மாற்றீடு இல்லா வாழ்வியல் ஓட்டம். இவற்றைக் கண்ணுற்ற பிறநாட்டார் கூட உண்மையை உணர்ந்து உரிய மருந்தைச் சொல்லுமளவிற்கு நாட்டின் நிலை பரிதாபகரமாக விருக்கு

ஈழத் தமிழர்களின் அவலம் போக்க வேண்டுமானால், அவலம் வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டுமானால் மூலமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். கோயிலை வெறுமனே விட்டு தடல்புடல் திருவிழாச் செய்ய முற்படுவது பதரைக் குற்றி மணியை எடுக்க முயலும் முயற்சியாகும்.

மதுரையின் பேராயர் போரிலே சிக்கித் தவிக்கும் இலட்சக்கணக்கான மக்களைப் பாதுகாக்கும் தார் மீக பொறுப்பு இங்கு...

# 'ஐயர்' என்ற சொற்பிரயோகம் இழிவானது அல்ல

# தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன

### ஐயர்தம் பெருமை

ஐயர்மாரை ஐயர்மார் என்று சுட்டுவது ஐயர்மார் சிலருக்கு அவ்வளவு பிடிக்கவில்லையாம். ஐயர்மார் அல்லாத சிலரும் ஐயர்மாரை அப்படிச் சுட்டுவதற்குத் தயங்கிச் சமாளித்துத் தப்பமுயல்கிறார்களாம். இந்த நிலைமை ஏன்?

உண்மையில் ஐயர் என்ற பதம் இழிவான குறிப்பினை உடையதா? இதனைச் சற்று நிதானமாகப் பார்ப்போம்.

பழந்தமிழில் 'ஐயன்' என்பது தமையன் (தம்+ஐயன்) தகப்பன், தலைவன் என்றெல்லாம் பல்பொருள் ஒரு சொல் ஆக வழங்கி வந்தது. சிவபெருமான் பார்வதி அம்மையாருக்கு, 'தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன்' என்றெல்லாம் அமைகிறான் என்பது திருவாசகம் திருப்பொற் சுண்ணம். சான்றோர் இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில், மிகவும் நெருக்கமான உறவினை உடையவர்களைக் குறிப்பதற்கே ஐயன் என்னும் பதம் வழங்கிற்று - அகப் பொருள் இலக்கியங்களிலே தமையன் மாரைக் குறிப்பதற்கே அது பெரிதும் பயன்பட்டது.

### பார்ப்பனர்

அச்சான்றோர் இலக்கியத்துக்கு இலக்கணம் கூறிய தொல்காப்பியர் 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்று சூத்திரம் செய்தர் தமிழர் பாரம்பரியத்தயும் நடைமுறைகளையும் பரிசீலிக்கும்போது, இச்சூத்திரத்தில் வரும் 'ஐயர்', பார்ப்பாரைக் குறிக்கிறதோ என்னும் 'ஐயம்' நமக்குத் தோன்றுகிறது. பிராமணர்கள் சங்ககால நூல்களிலே 'பார்ப்பார்' என்று மட்டுமல்லாமல், 'பார்ப்பன மாக்கள்' என்றும் குறிக்கப்படுவதை நாம் காண்கிறோம். 'பார்ப்பனர்' என்னும் சொல்லினைப் 'பிராமணர்' என்னும் சங்கதே மொழிப் பெயரின் தமிழ் வடிவம் என்று கொள்ளுதல் பிழையாகாது.

எனவே, இடைக்காலத்திலே 'பார்ப்பனர்' என்னும் சொல்லுக்குப் பெருமை சேர்க்கும் பொருட்டு அப்பார்ப்பனரைத் தமிழ் மக்கள் 'ஐயர்' என்று குறித்தனர் போலும் இவ்வாறு, பார்ப்பனர் 'ஐயர்' ஆகி மாறினாலும், 'ஐயர்' என்னும் பதம் எந்த ஒரு மனிதருக்கும் மதிப்பளிக்கும் ஒரு பின்னொட்டாகவே பிற்காலத் தமிழிலும் வழங்கி வந்துள்ளது.

### மரியாதை சொல்

சாதியைக் குறிப்பதற்கு அது சிற்சில வேளைகளிற் பயன்பட்டாலும் மரியாதை கொடுக்கும் உணர்வுக் குறிப்பும் அதற்கு எப்பொழுதுமே இருந்து வந்துள்ளது. கடிதங்களை எழுதுகையிலும், 'அன்பார்ந்த ஐயா' என்று விளிக்கும் வழக்கமே உள்ளது. இங்கு, 'அன்பார்ந்த பிராமணரே' என்ற கருத்துத் தோன்றுவதில்லை எனவே 'சேர்', என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக நிற்பதே ஐயர் அதற்கு நெடியதொரு வரலாறும் கருத்து வலிமையும் உண்டென்பது கவனிக்கத் தக்கது. திருமுறைகளிலும், புராணங்களிலும், சமய சாத்திரங்களிலும் 'ஐயர்' என்னும் சொல் தூய்மையும் தலைமைச் சிறப்பும் மிக்கவர்களையே தட்டி நிற்கிறது.

இனி, நாம் 'ஐயர்மாரிடம்' வருவோம். ஐயன் என்னும் ஒருமைச் சொல் 'ஐயர்' என உருமாறும் போது அது பன்மையாகிவிடுகிறது. ஆனால், உலக வழக்கில், பன்மைவாய்பாட்டுச் சொற்கள் ஒரே ஓர் ஆளையும் குறிப்பது உண்டு.

எனவே, 'ஐயர் ஒருவர் ஆலயத்திலே பூசை செய்கிறார்' என்று சொல்லுவதும் இலக்கண அமைதி கொண்டதாகவே கருதப்படும்.

அந்தணர் ஒருவரை ஐயர் என்று நாம் சுட்டினால், அந்தணர் பலரை எப்படிச் சுட்டுவது? அவர்களை நாங்கள் 'ஐயர்மார்' என்று சொல்லுகிறோம். விடயம் இவ்வளவு தான்.

இது பற்றி எவரும் ஏன், ஐயர்மார் கூட, குறை நினைக்கவோ குற்றம் சொல்லவோ இடமில்லை. அர், ஆர், ஓர், மர் என்பன போலவே 'மார்' என்பது கூட, ஓர் உயர்திணைப் பன்மை விகுதி தான் அண்ணன்மார், அக்காமார், தம்பிமார் ஆகியன எல்லாமே மரியாதைக்குரிய வார்த்தைகள் தான் ஏன், அண்ணமார், நாச்சிமார் என்னும் பிரயோகங்கள் தெய்வங்களையே குறித்து நிற்கின்றனவே! சமயகுரவர்கள் 'நாயன்மார்கள்' என்று தானே குறிக்கப்படுகிறார்கள் எனவே 'ஐயர்மார்' என்று அழைக்கப்படுவது பற்றி அந்தணப் பெருமக்கள் ஆத்திரப்படலாமா? பெருமை அல்லவா கொள்ளவேண்டும்!

ஆனால், ஏனோ தெரியாது பாரதியார் பார்ப்பாரை ஐயர் என்ற காலமும் போச்சே! என்று மரியாதை இல்லாமற் பாடிவிட்டார், அவருக்கு ஏதோ தனிப்பட்ட கோபம் போலும் ஆள் தான் இப்போது உயிருடன் இல்லையே! இனி அவரை நாம் என்ன செய்ய முடியும்? போகட்டும் விட்டுவிடுவோம்!

என்றாலும், இந்தத் திருமூலர் என்ன சொன்னார் தெரியுமா? பேர் கொண்ட பார்ப்பான் பிரான் தனை அர்ச்சித்தால்/ போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்/ பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆம் என்றே/ சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே' (திருமந்திரம் 519).

ஏன் அப்படிச் சொன்னாரோ தெரியாது ஒரு வேளை அவர் சொன்னது பண்பளவில் அல்லாமல் பேரளவில் நடமாடும் பார்ப்பாரைப் பற்றியதாக இருக்கலாம்.

நம்மிடையே காணப்படும் ஐயர்மாரைத் திருமூலரோ, நந்தியம் பெருமானோ அப்படிக் கண்டித்திருக்க மாட்டார்கள் என்றுநம்புவோமாக

என்ன இருந்தாலும் 'ஐயர்மார்' என்ற பதம் மரியாதைக் குறைவானது அல்ல என்று தேறுதல் அடைவோம்

★ முனைவர்; மு. பதம்பார்ப்பான் ★

# 450 கிராம் பாணிற்கான புதிய விலை விரைவில் நிர்ணயமாகும்

### யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டப்படி 450 கிராம் பாணுக்கான புதிய விலை விரைவில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக நேற்றுமுன் தினம் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், செய...

நேற்றைய கலந்துரையாடலில் பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் நுகர்வோர் பாதுகாவலர் சங்கத்தினர் 450 கிராம் பாணுக்கான புதிய விலைகள் பற்றி தமது கருத்துக்களை தெரிவித்த போதிலும் மேலதிக அரச அதிபர் 450 கிராம் பாணுக்கு ரூபா பத்து நியாயமென தெரிவித்தார்.

எனினும் இவ்விலை நிர்ண...

# இடம் பெயர்ந்த மாணவருக்கான பரீட்சை நிலையங்கள்

### வடமராட்சியில் அமையும்

(தென்மராட்சி)

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான பரீட்சை நிலையங்களாக வடமராட்சியில் உள்ள பின்வரும் பாடசாலைகள் அமையுமென தென்ம...

...க. பாடசாலை ஆகியவை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும்,

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் வரணி மகா வித்தியாலயம் ஆகியவை வரணி மகா வித்தியாலயத்திலும் அமைக்கப்படும் என...

முயற்சியாகும்.

மதுரையின் பேராயர் போரிலே சிக்கித் தவிக்கும் இலட்சக்கணக்கான மக்களைப் பாதுகாக்கும் தார்மீக பொறுப்பு இந்தியாவுக்குண்டு என அப்பட்டமாகக் கூறுகிறார். புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டுகிறார் உபயகாரர் புலிகளுடன் பேசவும் வேண்டுமென்கிறார்.

சத்தங்கள் ஓய்வதில் தான் சமரசம் பிறக்கும். யுத்த அனர்த்தங்கள் விரட்டப்பட வேண்டுமானால் யுத்த நிறுத்தம் ஒன்று வேண்டும். புரிந்துணர்வின் அத்திபாரத்தில் பிரச்சினைகள் பற்றிப் பேசித் தீர்க்கப்பட வேண்டும். விட்டுக்கொடுப்பு என்ற ஊக்கி இருதரப்பு வேறுபாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும்.

சிதைந்து சீரழிந்த மண்ணை பழைய நிலைக்கு இட்டுச்செல்ல, வேகமாக வளரும் மேற்குலக நாடுகளுடன் இணைந்து வளர, முதலில் யுத்தம் அகல வேண்டும். அதுவே வாழ்வியல் திறவுகோல்.

அன்புடன் ஆசிரியர்

இவ் விடயம் தொடர்பாக நேற்றுமுன் தினம் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், செயலக விலைக்கட்டுப் பாட்டாளர்கள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பேக்கரி உரிமையாளர்களுடன் ஆராயப்பட்டது.

...கான புதிய விலைகள் பற்றி தமது கருத்துக்களை தெரிவித்த போதிலும் மேலதிக அரச அதிபர் 450 கிராம் பாணுக்கு ரூபா பத்து நியாயமென தெரிவித்தார்.

எனினும் இவ்விலை நிர்ணயம் தொடர்பாக அடுத்த கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படுமெனவும் மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

## மறைந்த பேராசிரியருக்கு நல்லை ஆதீனம் அஞ்சலி

பேராசிரியர் சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் கைலாசநாதக் குருக்களின் இழப்பு முழுச்சைவ மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் இவ்வாறு அன்னாரின் மறைவு குறித்து நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் நல்லூர் சிவன் கோவில் மற்றும முன்னேஸ்வரம் தேவஸ்தானம் ஆகியவற்றில் பிரதம குருவாக இருந்து சமயப்பணிகளில் ஈடுபட்டதுடன், யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் முதலாவது பேராசிரியராகவும் விளங்கியவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-3]

## அடையாள அட்டைகள் தயாரிப்பு வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாண செயலகத்தில் இயங்கும் அடையாள அட்டைகள் தயாரிக்கும் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த நான்குமாதகாலமாக விசேட அடையாள அட்டைகளை கவர் செய்யும் போசி'' என்னும் பிளாஸ்மரிக் கவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து எடுத்துவரப்படாமையினால் இந் நிலைஏற்பட்டுள்ளதாகயாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் மக்கள் அடையாள அட்டைகளை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாக தெரியவருகிறது. (த)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான பரீட்சை நிலையங்களாக வடமராட்சியில் உள்ள பின்வரும் பாடசாலைகள் அமையுமென தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வி. செல்வராசா தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம்,

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை, சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ்க் கலவன் பாடசாலை, சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியிலும்,

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும்,

நாவற்குழி மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகியவை கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும்,

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்,

எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், மட்டுவில் மகா வித்தியாலயம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும்,

பளை மத்திய கல்லூரி வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை, ... கரசு மகா வித்தியாலயம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் வரணி மகா வித்தியாலயம் ஆகியவை வரணி மகா வித்தியாலயத்திலும் அமைக்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-77)

## ஒய்வூதியர் கொடுப்பனவு நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான ஆகஸ்ட் மாதத்திற்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகள் நாளைமுதல் ஆரம்பமாகவுள்ளது.

பற்றுச்சீட்டுக்கள் தபால் மூலம் ஒய்வூதியர்களுக்கு அனுப்பி வைப்பதில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இம்முறை வழமைபோன்று பற்றுச்சீட்டுக்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

சம்பந்தப்பட்ட வங்கிகளில் வைத்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் ஒய்வூதியர்கள் தங்கள் வங்கிகளுக்குச்சென்று ஒய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை முதலியவற்றைக் காண்பித்து பற்றுச்சீட்டைப் பெற்று பூரணப்படுத்தி தமது ஒய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசெயலர் கே. குணராசா கேட்டுள்ளார். (க)

பொதுசன நூலகம்,
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



# கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் சிவில் நிர்வாக அதிகாரிகள்?

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டி இடவுள்ளது.

இத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இளைப்பாறிய சிவில் சேவை அதிகாரிகள், தற்போது கடமையில் உள்ள சிவில் சேவை அதிகாரிகள் மற்றும் நீண்டகாலக் கட்சித் தொண்டர்களும் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசியப் பட்டியல் எம். பி. மாவை சேனாதிராசா யாழ். மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து கூட்டணிப் பிரமுகர்களையும், ஆதரவாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் போது தேர்தலில் போட்டியிடவுள்ள அபேட்சகர்கள் சிலரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை ஈ.பி.டி.பி. அமைப்பினரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர். (வ)

## தேர்தல் களம்

## அம்பாறை மாவட்டத்தில் த. வி. கூட்டணி தனித்துப் போட்டியிடும்?

எதிர் வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதென தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் கல்முனையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பாளர்கள் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ)

**மசோதா...**

சித்தலைவர்கள் கூடி இம் முடிவை எடுத்திருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்கள் கட்சி மாறி ஆதரவு தருவார்கள் என்ற நிலையை நம்பி இருந்த அரசு ஐ.தே.க எம்.பிக்கள் தந்திரமாக சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாலேயே அரசின் முயற்சி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதாத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதா அடுத்த பாராளுமன்றத்திலேயேவிவாதிக்கப்படும் எனவும் அடுத்த அரசை பொதுஜன ஐக்கிய முன்னணி அமைத்தாலேயே இது சாத்தியப்படும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

**அரசுக்கு...**

சிங்கள பௌத்த பேரினவாதிகளும், ஜே. வி. பியினரும், மற்றும் சிங்கள அமைப்புக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை புறக்கோட்டைப்பகுதிகளிலும் புத்தபிக்குகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

பொலநறுவ, அம்பாறை, கல்கமுவ, மாவனல்ல, கொழும்பு போன்ற இடங்களில் அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டமும், காலி, திரு

**விட்ட...**

அவர் மேலும் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தையினை விட்டஇடத்தில் இருந்து அரசுடன் பேச்சுக்களை தொடர தாம் தயாராகஇருக்கிறோம்.

இதே சட்டமூலத்தை மீண்டும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பாரேயானால் நாம் வீதியில் இறங்கிப் போராட தயாராக இருக்கிறோம்.

இதேவேளை எமது பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டவிடயங்களை விட மேலதிகவிடயங்கள் இருந்தமையினால் இச்சட்டத்தை நாம் ஆதரிக்கவில்லை என்றும் ரணில்தெரிவித்தார். (வ)

**கைதடி...**

பட்டிருந்ததாகவும் கொலை செய்யப்பட்ட சமயம் இவரிடம் பெரும் தொகையான பணம் இருந்ததாகவும் அறியப்படுகின்றது.

இவரின் கொலை தொடர்பாக உக்கிரைன் நாட்டுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (வ-77)

**உண்ணா...**

திக்கப்பட்டுள்ளனர்

இவர்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு மேலும் நான்கு பேர்சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்

## மிதிவெடியில் காலிழப்பு

(வவுனியா)

பளை மாசார் பகுதியில் தென்னம்மட்டை எடுக்கச் சென்ற இளைஞர் ஒருவர்மிதிவெடியில் சிக்கி கால்ஒன்றை இழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது

குமாரவேலு தயாபரன் [வயது28]என்பவரே காலை இழந்தவராவார். (ந-7)

**புலிகளிடம்......**

இவ்வாறு புதுடில்லி நியாய சபை விடுதலைப் புலிகளின் தலைமையகத்திடம் விளக்கம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சட்டபூர்வமற்ற அமைப்பாக ஏன் பிரகடனம் செய்யக் கூடாது என்பதற்கு விளக்கம் தருமாறும் கேட்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (வ)

**இரண்டாவது..**

சீர் திருத்த மசோதா வாபஸ் பெறும் வரை சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்று அந்த இளம் பிக்கு தெரிவித்துள்ளார். (வ)

## கன்னிப்பேச்சை தவறவிட்ட கணேசமூர்த்தி எம்.பி

நேற்று முன் தினம் பொது ஜன ஐக்கியமுன்னணியின் சார்பில் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பொ. கணேசமூர்த்தியை சபையில் கன்னிப் பேச்சை ஆற்றுவதற்காக நேற்றுசபாநாயகர் அழைத்த போதிலும் அவர் சபையில் இருக்கத் தவறியதால் கன்னிப்பேச்சை ஆற்ற முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## 50ஏக்கர் காணி சுவீகரிப்பு தமிழ்க்கட்சிகள் பலத்த எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியா விமான நிலைய விஸ்தரிப்புக்கென மேலும் 50 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவந்துள்ளது.

காணி சுவீகரிப்பு விடயம் தெரியவந்ததை அடுத்து தமிழ்க்கட்சிகள் தமது பலத்த எதிர்ப்பினைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன.

தச்சன்குள விமானப்படை விஸ்தரிப்பிற்கு ஏற்கனவே 400 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு அவற்றுக்கான நட்டஈடு இதுவரை வழங்கப் படவில்லை. இந்நிலையில் இறம்பைக்குளப் பகுதியில் மேலும் 50 ஏக்கர் காணி படையினரின் தேவைக்கு சுவீகரிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுவீகரிக்கப் படவுள்ள காணிகளுக்கு உறுதிகள் இருப்பதனால் சிவில் அதிகாரிகள இச்சுவீகரிப்பிற்கு மறுப்புக்தெரிவித்துள்ளனர்.

## வீடு சேதம்

(யாழ்ப்பாணம்)

கரணவாய் கலட்டிப்பகுதியில் நேற்று முன்தினம்வீசியகடும் காற்றினால் பனை யொன்று முறிந்து வீட்டிற்கு மேல்வீழ்ந்ததில் வீடுபலத்தசேதமடைந்தது

இதன்போது வீட்டில் இருந்தவர்கள்காயமெதுவுமின்றி தெய்வா தீனமாகத்தப்பினர். (ந)

**பாராளுமன்ற...**

ஐந்து வருடகாலஎம்.பி பதவியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் எதுவித நிதியும் தனக்கு வழங்கவில்லை எனக் குறை கூறினார். (ந)

**4 பௌத்த...**

பிக்குளுக்கு தனித்தனியான கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அஸ்கிரிய, மல்வத்த, ரம்புக்கல ஆகிய நான்கு பௌத்த பீடாதிபதிகளே ஒப்பமிட்டு எம்.பிக்களுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கடிதத்தில் நாட்டு மக்களின் நலனைக் கருதியும், நாட்டின் ஒருமைப்பாட்டை சிந்தித்தும் மசோதாவை எதிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஒரு சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் ரோந்து சென்று படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்தில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் சிப்பாய் பொதுமக்கள்இருவரும்காயம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் மாவடி வேம்புபடை முகாமை சேர்ந்த நந்தசேன (வயது35) என்பவரே கொல்லப்பட்டவராவார். காயம் அடைந்த சிப்பாய் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பொதுமக்கள்இருவர் காயமடைந்தனர். த. குமார் (வயது9) அரச செல்வக்குமார் (வயது16) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ந-7)

## பத்து எம். பிக்கள் சிங்கப்பூருக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பத்து எம்.பிக்கள் கட்டாயப் படுத்தி சிங்கப்பூருக்கு அனுப்பி வைத்தமையானது எம்.பிக்களின்சிறப்புரிமையை மீறுவதாக கடற்றொழில் மின்னியல் அமைச்சர் மகிந்த விஜயசேகர வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சரத் அமுனுகமவும் குற்றம் சாட்டியுள்ளனர். (வ)

மேற்கொண்டிருந்தனர்.

பொலநறுவ, அம்பாறை, கல்கமுவ, மாவனல்ல, கொழும்பு போன்ற இடங்களில் அரசுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டமும், காலி, திருமலை, புறக்கோட்டைப் பகுதியில் எதிராகவும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. (வ)

உண்ணா...

திக்கப்பட்டுள்ளனர்

இவர்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு மேலும் நான்கு பேர்சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[ந 60-7]

என்று அந்த இளம் பிக்கு தெரிவித்துள்ளார். (வ)

களின் நலனைக் கருதியும், நாட்டின் ஒருமைப்பாட்டை சிந்தித்தும் மசோதாவை எதிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

மின்னியல் அமைச்சர் மகிந்த விஜயசேகர வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சரத் அமுனுகமவும் குற்றம் சாட்டியுள்ளனர். (வ)


# யாழ். கொட்டடி ச. ச. நிலையம்

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு - 0175 சிவகுமார் ஸ்ரோர்ஸ்

2ஆம் பரிசு - 0354 சோபனா ஆடையகம்

3ஆம் பரிசு - 0994 றோயல் கோப்பி பார்

ஆறுதல் பரிசுகள்

0685, 0149, 0331, 0802, 0742

★ முதற் பரிசான வானொலிப் பெட்டியை அன்பளிப்புச் செய்தவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர்.

★ முதற் பரிசான வானொலிப் பெட்டியை வென்ற செல்வன் ந. பிரபாகரன் தமது தந்தையார் அமரர் சி. நமசிவாயம் சமாதான நீதிவான் அவர்கள் நினைவாக அதனை நிலையப்பாவனைக்கு வழங்கியுள்ளார். இவருக்கு எமது நன்றிகள்

நிர்வாகிகள்

(கி-698)



# கஜன்

திரை

ஊர்காவற்றுறை

பிரபு, ரோஜா நடித்த

## திருநெல்வேலி

காட்சி நேரம்

பி.ப 3.30 மணி

(கி/652)



# ஸ்ரீசெல்வா

[யாழ்ப்பாணம்]

கரன், ரோஜா, வடிவேலு நடித்த

## கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

காட்சி நேரம்

10-30, 2-00 (ப.நே)

[கி 688]



# ஒப்படைக்கவும்

துன்னாலையைச் சேர்ந்த

சிவஞானம் சிவகௌரி

என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டை என்பன துன்னாலைக்கும், யார்க்கருவுக்கும் இடையில் தவறிவிட்டது

கண்டெடுத்தவர்கள் தாமரைக் குளம், துன்னாலையில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(கி-699)



# அதே இடத்தில்

## குமரன் கொமினிகேசன்

★ பிள்ளையார் கோவிலடி
களபூமி, காரைநகர்.
T.P No:- 070-212978

★ இல 27, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P No:- 021-2765

எனும் இடத்தில் தொடர்ந்தும் இயங்குகிறது என் பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

பொ. தனபாலசிங்கம்
(உரிமையாளர்)

(கி-700)



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] ஸ்தாபனத்தாரால் இல: 15, [illegible] யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள [illegible] 2000 ஆம் ஆண்டு [illegible] மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.